**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF, SHENCOTTAH**

O.S.No.58/2021

Deposition of witness for PW3

| | | |
|---|---|---|
| Name | : | பூசைத்துரை |
| Father's Name | : | சுடலைமாடன் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 38 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 17.04.2026.

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் 4ம் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன். எனது தரப்பில் எந்த ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

குறுக்கு விசாரணை (குறுக்கு விசாரணை)

1. பிரதிவாதிகள் எங்கள் இடத்தை ஆக்கிரமிப்பு செய்து படிக்கட்டு கட்டினார்கள், அதனால்தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். எந்த தேதியில் படிக்கட்டினார்கள் என்று ஞாபகம் இல்லை, ஆனால் சுமார் 5 ஆண்டுகள் இருக்கும்.

2. எனக்கு பிரதிவாதியின் ஆக்கிரமிப்பு அடிவிவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை, அதனால் தான் எனது

பிராதில் எந்த அளவுகளும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் ஸ்தல பார்வை செய்யும்போது நான் உடனிருந்தேன். ஆணையர் அறிக்கையில் எந்த ஆக்கிரமிப்பும் இல்லை என்றால் சரியல்ல.

3. எனது முதல்விசாரணை பத்தி எண்.4,5 ல் உள்ள விவரத்தை எனது பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கைப்படி பிரதிவாதி இடம் தான் 1 அடி 1 அங்குலம் தென்பகுதியில் உள்ளது என்றால் சரியல்ல.

4. நான்தான் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் மரக்கன்று நட முயற்சி செய்தேன் என்றும், அதனால்தான் 1ம் பிரதிவாதி என் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார் மனு ரசீது மேற்படி காவல்நிலைய புகார் மனு ரசீது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. காவல்நிலையத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் எந்த பிரச்சனையும் செய்யக்கூடாது என அறிவுறுத்தினார்கள் என்றால் சரிதான். அதைமீறி நான் 1ம் பிரதிவாதியிடம் பிரச்சனை செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. எனது வழக்கிற்கு வழக்குமூலம் கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்பதற்காகதான் வம்பாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**